பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.
சார்வரி, தை – 21,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

**கடித எண்.2342/ஏ2/2021 - 1, நாள் 03.02.2021**

அனுப்புநர்

டாக்டர். ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப.,
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்

அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை – 600 009,
தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகள், சென்னை- 600 009,
மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட நீதிபதிகள் மற்றும் தலைமை நீதித்துறை நடுவர்கள் உள்ளிட்ட அனைத்துத் துறைத் தலைவர்கள்,
வருவாய் நிருவாக ஆணையர், சென்னை- 600 005,
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை-600 104,
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 009.

ஐயா,

பொருள் :- மனுக்கள் - அரசு அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் குறைகளைவு மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான நடைமுறைகள் - அறிவுரைகள் வலியுறுத்துதல் - தொடர்பாக.

பார்வை :-
1. அரசாணை (நிலை) எண். 114, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ)துறை, நாள் 02.08.2006
2. அரசாணை (நிலை) எண். 114, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை, நாள் 12.09.2013.
3. அரசுக் கடித எண்.41169/ஏ/2014-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை , நாள் 03.11.2014
4. நீதிப் பேராணை மனு எண். 20527/2014-ல் சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 01.08.2014-ம் நாளிட்ட உத்தரவு.
5. அரசாணை (நிலை) எண். 99, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை, நாள் 21.09.2015.
6. அரசுக் கடித எண்.6112/ஏ/2018-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை, நாள்16.03.2018.
7. அரசு சிறப்பு வழக்குரைஞர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம், நாள் 25.01.2021.

******

பார்வை ஐந்தில் காணும் அரசாணையில் அரசு அலுவலகங்களில் நேரடியாக மற்றும் மின்னஞ்சல் வாயிலாக பெறப்படும் குறைகளைவு மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறைகளான 3 நாட்களுக்குள் மனுவை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை வழங்க வேண்டும் உள்ளிட்ட அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(த.பி.பா)

2. இருப்பினும், அவ்வறிவுறுத்தங்களை கடைபிடித்தலில் குறை நேர்வதால் பொதுமக்கள் நீதிமன்றங்களை நாடுவதாகவும் எனவே அறிவுறுத்தங்களை தவறாது கடைபிடிக்க அரசு அலுவலர்களை வலியுறுத்துமாறும் பார்வை 7-ல் கண்ட கடிதத்தில் அரசு சிறப்பு வழக்குரைஞர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. எனவே, பார்வையில் கண்ட ஆணைகள் / அறிவுறுத்தங்களை அனைத்து அரசு அலுவலகங்களும் முறையாக கடைபிடிக்க வேண்டும் என அனைத்துத் துறைச் செயலாளர்களும் கேட்டுக்கொள்ளப்படுவதோடு, தமது நிருவாகத்தின் கீழுள்ள சார்நிலை அலுவலகங்களுக்கு உரிய அறிவுறுத்தங்கள் வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

4.2.21

அரசு தலைமைச் செயலாளருக்காக

04/02/2021

<u>நகல்</u>

அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை – 600 009,
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர்,
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 600 009,
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர்,
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை, சென்னை – 600 009,
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.